# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2099/3 - 2018 නොවැම්බර් මස 26 වැනි සඳුදා - 2018.11.26

*2099/3 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: ARA/ LND/ ACQV1/D3/42
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2016/VE/415

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்ரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், அரனாயக்க பிரதேச செயலகப் பிரிவின், கல்பட கோரளை (மேற்கு) சிறு பிரிவு, இலக்கம் 44ஏ, ஹபலக்ககாவ கிராம அலுவலர் பிரிவின், தம்பரவ கிராமத்தில் அமைந்துள்ள சிரேஷ்ட நில அளவையாளர் அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2018.10.08ஆந் திகதியுடைய ஆ. கி. கே. 3615 இலக்க ஆரம்ப வரைபடத்தில் காணித் துண்டு 01 எனக் காட்டப்பட்டுள்ள விஸ்தீரணத்தில் ஏறத்தாள 0.3284 ஹெக்டயார் விஸ்தீரணமான கொபேகடுவேஹேன என்னும் காணியின் எல்லைகள் பின்வருமாறு.

**துண்டு இல. 01 - காணியின் பெயர் : கொபேகடுவேஹேன; விஸ்தீரணம்: 0.3284 ஹெக்டயார்.**

எல்லைகள்:

வடக்கு: கொபேகடுவேஹேன மற்றும் பகுல்வல கிராமத்தின் எல்லை; கிழக்கு: கே 3573 ஆவது ஆரம்ப வரைபடத்தின் 4ஆவது காணித் துண்டு; தெற்கு: அலுத்துறையலாஹேஹேன; மேற்கு: அலுத்துறையலாஹேஹேன மற்றும் கொபேகடுவேஹேன.

வேறு விபரம்: காணி எடுத்தல் சட்டத்தின் 38 (அ) ஆம் பிரிவின் கீழ் காணி எடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் காணிக்கு உரிமை கோருபவர், இலக்கம் எப் 07, தெமலஹிரிய, அரனாயக்கவில் வசிக்கும் எம். எம். கே. தயாரத்ன. காணி எடுத்தல் நடவடிக்கையை நிறைவு செய்வதற்காக.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு. ப 10.00 மணிக்கு அரனாயக்க பிரதேச செயல கத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இஸட். ஏ. எம். பைசல்,
பிரதேச செயலாளர்,
அரனாயக்க.

பிரதேச செயலகம்,
அரனாயக்க.
2018, நவெம்பர் 23.

*12 - 191*

திருத்தம்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/EL/LND/2/AQUSN/02
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் இல.: LD/05/2005/H/395

மேற்குறித்த தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 14 ஆந் திகதிய 1875/31 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள நில அளவை வரைபட இலக்கமும், திகதியும், அதேபோன்று நட்டஈட்டு உரித்துக் கோரல் விசாரணைத் திகதியும், ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய திகதியும் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக பின்வருமாறு நில அளவை வரைபட இலக்கமும், திகதியும், அதேபோன்று நட்டஈட்டு உரித்துக் கோரல் விசாரணைத் திகதியும், ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய திகதியும், பதிலீடு செய்யப்படுவதன் மூலம் மேற்குறித்த அறிவித்தல் திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

| | |
|---|---|
| நீக்கப்படுகின்ற நில அளவை வரைபட இல. B/ELL / 2008/148 | பதிலீடு செய்யப்படுகின்ற நில அளவை வரைபட இல. இ.கி.வ இல. 36 (பிற்சேர்க்கை இல. 49, தாள் இல. 51) |
| நீக்கப்படுகின்ற நில அளவை வரைபடத் திகதி 2013.05.15 | பதிலீடு செய்யப்படுகின்ற நில அளவை வரைபடத் திகதி 2008.11.18 |
| நீக்கப்படுகின்ற நட்டஈட்டு உரித்துக் கோரல் விசாரணைத் திகதி 2014, செத்தெம்பர் 15. | பதிலீடு செய்யப்படுகின்ற நட்டஈட்டு உரித்துக் கோரல் விசாரணைத் திகதி 2019, சனவரி 23. |
| நீக்கப்படுகின்ற நட்டஈடு பற்றிய கோரிக்கைகளின் விபரங்களையும், ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டிய திகதி 2014, செத்தெம்பர் 15. | பதிலீடு செய்யப்படுகின்ற நட்டஈடு பற்றிய கோரிக்கைகளின் விபரங்களையும், ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டிய திகதி 2019, சனவரி 17. |

கே. ஏ. ஜே. பிரியங்கிகா,
பிரதேச செயலாளர்,
எல்ல.

பிரதேச செயலகம்,
எல்ல.

12 - 192